

# கிறிஸ்டடெல்ஃபியன்ஸ்

(கிறிஸ்துவில் சகோதரர் மற்றும் சகோதரிகள்)

வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் சமுதாயத்தின் அறிமுகம்

ரோப் ஹின்ட்மன்

# கிறிஸ்டடெல்ஃபியன்ஸ்

(கிறிஸ்துவில் சகோதரர் மற்றும் சகோதரிகள்)

வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட
ஓர் சமுதாயத்தின் அறிமுகம்

ரோப் ஹின்ட்மன்

Cover illustration :

Christadelphians in India, the Caribbean, Africa, and Eastern Europe.

Published and Printed by

**Printland Publishers**

**GPO Box 159**

**Hyderabad A.P. 500001**

India.

# கிறிஸ்டடெல்ஃபியன்ஸ்

## (கிறிஸ்துவில் சகோதரர் மற்றும் சகோதரிகள்)

### வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் சமுதாயத்தின் அறிமுகம்

(ரோப் ஹின்ட்மன்)

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) புதிய ஏற்பாட்டு காலத்திலிருந்த ஆதிகிறிஸ்தவ திருச் சபைகளின் குணாதிசயங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்பட முயலும் ஓர் சிறிய மதச் சமுதாயமாகும்.

'கிறிஸ்டடெல்ஃபியன்ஸ்' (Christadelphians) என்றபெயர் ஏறக்குறைய 180 வருடங்களாக பழக்கத்திலிருந்து வருகிறது. இது 'கிறிஸ்துவில் சகோதர சகோதரிகள்' என்றஅர்த்தம் கொண்ட ( க்றிஸ்ட்அைஅடெல்ஃபோஸ் என்ற ) இரண்டு கிரேக்க பதங்களிலிருந்து உருவானது.

(பார்க்க மத்தேயு 23: 8, கொலோசெயர் 1: 2 மற்றும் எபிரெயர் 2: 11.)

நாங்கள் உலகமுழுவதும் 120 தேசங்களுக்கு மேல் பரவியுள்ளோம். இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, வடஅமெரிக்கா, இந்தியா, ஆசியா, மற்றும் ஆப்ரிக்காவிலுள்ள தேசங்களில் 'கிறிஸ்டடெல்ஃபியன்ஸ்' பெருங்குழுக்களாக செயல்பட்டு வருகின்றோம். ஆதி கிறிஸ்தவர்களைப் போல, நாங்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் மற்றும் ஒரு சிலர் அவரவர்களுடைய சொந்த கூடங்களிலும் சந்தித்து வருகிறோம்.

(பார்க்க அப்போஸ்தலர் 1: 13-14, 2: 46-47, 18: 7, 19: 9, 28: 30.)

நாங்கள் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் வாழ்ந்தது போல வாழ முயற்சிக்கிறசாதாரண ஜனங்கள். ஒவ்வொரு திருச்சபைக் கூட்டமும் 'எக்லீஷியா' (புதிய எற்பாட்டு காலத்தில் 'சபை' என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு கிரேக்க பதம்) என்று அழைக்கப்படுகிறது. நாங்கள் யாரையும் சம்பளத்துக்குத் திருச்சபை

ஊழியர் அல்லது அதிகாரிகளாக நியமிப்பதில்லை. திருச்சபை அங்கத்தினர் ஒவ்வொருவரும் 'சகோதரர்' அல்லது 'சகோதரி' என்று பொதுவாக அழைக்கப்படுகின்றனர். எல்லா அங்கத்தினரும் தங்கள் நேரம், பணம், பொருள், மற்றும் சக்தியை தேவனுக்குத் தொண்டு செய்யும்படி அர்ப்பணிக்கிறபடியால், சபை நிர்வாகம் அங்கத்தினராலேயே கவனிக்கப் படுகிறது. ஒரு பொதுவான நம்பிக்கை எங்களது சகோதர ஐக்கியத்தை இணைத்துப் பிடித்து வைத்துள்ளது.
(பார்க்க ரோமர் 12:4-8, 1.கொரிந்தியர் 12:4-27, கலாத்தியர் 3:28.)

எங்கள் ஒரே வழிக்காட்டியாக வேதாகமத்தை மாத்திரம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அது ஒன்றேதேவனால் அருளப்பட்ட வேதவாக்கென்று மனதார விசுவாசிக்கின்றோம். எங்கள் திருச்சபை அங்கமாக்குவதற்கு, எங்களைப்போல பொதுவிசுவாசத்தை இணைந்து அறிக்கை செய்கிறவர்களை (தண்ணீருக்குள் முழுவதும் முழுக்கி) ஞானஸ்நானம் கொடுப்பதன் மூலம் எங்கள் ஐக்கியத்தில் இணைக்கிறோம்.

## ஓர் சுருக்கமான சரித்திரம்

அப்போஸ்தலர்களைத் தொடர்ந்து இன்றுவரை அநேக விசுவாசிகள் இன்றைய கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் போல அதே விசுவாசத்தில் ஒருமைப்பட்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் எண்ணிலடங்கா தனிப்பட்ட சமுதாயத்தினர் ஒன்றாகக் கூடி வேதத்தை ஆராய்ச்சி செய்து அதன் போதனைகளைச் சாதாரண விசுவாசத்துடன் ஏற்று வந்துள்ளனர்.

கிறிஸ்டடெல்ஃபியன்ஸின் நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் அடிப்படையாக புதிய ஏற்பாட்டு காலம் முதல், முதலாம் இரண்டாம் நூற்றாண்டு வரை வாழ்ந்த ஆதிகிறிஸ்தவர்களின் வாழ்வில் காணமுடிகிறது. அவைகளைக் குறித்து கிலமெந்தின் நிருபம், டைடேஷ் மற்றும் அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணம் முதலிய தாக்கீதுகளில் தொடர்பு இருப்பதைக் காணலாம்.

ஐரோப்பாவில் 16ம் நூற்றாண்டில் நடந்த மதசீர்திருத்தலின் போது சொந்தமாக நினைக்கக் கூடியவர்களின் நடுவில் அதே விசுவாசமும் பழக்கங்களும் வெளிவந்தன. அவர்களில் குறிப்பாக வேதாகம எண்ணத்தோடு செயல்பட்டவர்களில் சுவிஸ்நாட்டு முற்போக்கு பேப்டிஸ்டுகளும், போலந்து தேசத்து சொஸினியன் குழுவினரும் அடங்குவர். ஆதி ஆங்கிலேய பேப்டிஸ்ட் குழுவினரும்

அதே வித நம்பிக்கை கொண்டிருந்தனர். (ஆயினும் அந்த நம்பிக்கைகளை இன்றைய பேப்டிஸ்ட் குழுவினர் ஆதரிப்பதில்லை). 18ம் நூற்றாண்டில் அநேக அறிவுத்திறன் வாய்ந்த முன்னோடி தலைவர்களில் சர். ஐசக் நியூட்டன் மற்றும் வில்லியம் ஹ்விஸ்டன் இப்படிப்பட்ட நம்பிக்கைகளை உடையவராயிருந்தனர்.

இன்றைய நவீன கிறிஸ்டடெல்ஃபியன் தலைமுறை1830.ல் ஆரம்பமானது. அப்போதுதான் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் மத உயிர்மீட்சி மற்றும் மறுமலர்ச்சி ஏற்பட்டன. அமெரிக்காவிலுள்ள ஒரு மருத்துவ வைத்தியரான ஜான் தாமஸ் 'ராஜ்யத்தின் நற்செய்தி' (ஏக்கஹறவீக்ஷ ச்கி ஞ்குக் ஒகூநுகீக்ஷச்நு) என்றபுத்தகத்தை வெளியிட்டார். அதில் உயிர்த்தெழுதல் மற்றும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த வேதாகம போதனைகளை சுட்டிக் காண்பித்தார். இங்கிலாந்தில் பத்திரிகை நிருபரான ராபர்ட் ராபர்ட்ஸ் என்பவர் இதே காரணத்தோடு 'எதிர்காலத்து பிரதிநிதி' (Ambassador of the Coming Age) என்றநூலை வெளியிட்டார். தாமஸ் மற்றும் ராபர்ட்ஸ் இருவரும் எந்த தரிசனத்தைக் கண்டதாகவும், தங்களது தனிப்பட்ட வெளிப்பாடுகளையும் கொண்டு பேசாமல், வேதாகமத்தின் உண்மை மாணாக்கராக மாத்திரம் இருக்க முயன்று வந்துள்ளனர்.

அமெரிக்க உள்நாட்டு போர் 1861ல் மூண்டபோது, போரில் பங்கெடுக்காத கிறிஸ்தவ குழுவினர் அனைவரையும் மத்திய அரசாங்கம் தங்களுடன் பதிவு செய்யும்படி ஆணையிட்டது. அப்போது இல்லிநோய்ஸ் மாகாணத்து ஒக்லே ஊரிலுள்ள சாம் கோஃப்மன் மற்றும் பிறசகோதரர்கள் தங்களைக் "கிறிஸ்துவுக்குள் சகோதரர், அல்லது ஒரு வார்த்தையில், கிறிஸ்டடெல்ஃபியன்" என்று பெயர்பதிவு செய்து கொண்டனர். இவ்வாறே அமெரிக்கா மற்றும் இங்கிலாந்திலுள்ள அதேபோன்றமனதுடைய விசுவாசிகளின் குழுக்கள் தங்களையும் அந்த பெயரின்கீழ் ஏற்றுக் கொண்டனர். அப்போதிலிருந்து உலகமுழுவதும் அநேக நாடுகளில் கிறிஸ்டடெல்ஃபியன் குழுக்கள் தன்னிச்சையாக செயல்பட ஆரம்பித்தன.

இந்த புத்தகத்தின் மீதி பகுதிகளில் உங்களுக்கு அறிமுகப்படுத்துவது:

1. எங்களது நம்பிக்கைகள்
2. எங்களது வாழ்க்கை முறைகள்
3. எங்களது ஐக்கியம், தொழுகை, மற்றும் சாட்சி.

# 1. எங்களது நம்பிக்கைகள்

## வேதாகமம்

வேதாகமமானது மனிதனுக்கு அருளப்பட்ட தேவனுடைய செய்திகளடங்கிய ஒரே வெளிப்பாடு என்று நாங்கள் நம்புகிறோம். அதின் மூலம் ஒவ்வொருவரையும் தேவனிடத்திலும் அவருடைய குமாரனிடத்திலும் விசுவாசம் வைக்கும்படி அழைக்கப்படுகிறோம். ஒவ்வொருமுறையும் அதை வாசிக்கும்போது, மிகுந்த பயபக்தி, ஜெபம், மற்றும் கருத்தோடு வாசிக்க வேண்டும். ஏனெனில் அது ஒன்றே நமக்கு அதிகாரப் பூர்வமானது.

**(2.தீமோத்தேயு 3: 16-17, 1.பேதுரு 1: 10-12, 2.பேதுரு 1: 20-21, அப்போஸ்தலர் 17: 11, எபேசியர் 2: 20, ரோமர் 16: 26.)**

## தேவன்

நித்தியமும் அழிவில்லாமையுமுடைய தேவன் ஒருவர் மட்டும் தான் இருக்கிறார். இயேசுகிறிஸ்து அவருடைய ஒரே பேறான குமாரன். மேலும் பரிசுத்தாவி அவருடைய வல்லமை ஆகும்.

**(உபாகமம் 6: 4, லூக்கா 1: 35, அப்போஸ்தலர் 1: 8, 1.கொரிந்தியர் 8: 6, 1.தீமோத்தேயு 1: 17, 2: 5, 6: 16.)**

## மனிதன்

மனிதன் சாவுக்கேதுவானவன் மற்றும் தேவனுக்கு முன்பாக அவன் ஒரு பாவி. அவனுடைய முழு சுபாவமும் பாவம் செய்ய தூண்டுகிறது. அந்த பாவத்திற்குத் தண்டனை மரணம். அது முழு வாழ்க்கையை முடிக்கக்கூடியது.

**(எரேமியா 17: 9, மாற்கு 7: 21-23, ரோமர் 3: 23, யாக்கோபு 1: 13-15, ரோமர் 6: 23, பிரசங்கி 9: 5,10, சங்கீதம் 115: 17, 146: 4.)**

## நம்பிக்கை

மரணத்திற்குப்பின் மனித வாழ்க்கையின் ஒரே நம்பிக்கை சரீர உயிர்த்தெழுதலிலும், பூமியில் தேவனுடைய ராஜ்யத்தில் கிடைக்கும் நித்திய ஜீவனிலும் அடங்கியுள்ளது..

**(சங்கீதம் 49: 12-20, யோவான் 11: 25-26, அப்போஸ்தலர்**

24: 15, ரோமர் 8: 22-39, 1.கொரிந்தியர் 15: 12, வெளிப்படுத்தல் 5: 10, 20: 4.)

### வாக்குத்தத்தங்கள்

சுவிசேஷமானது பழைய ஏற்பாட்டில் தேவன் ஆபிரகாமுக்கும் தாவீதுக்கும் கொடுத்த வாக்குத்தத்தங்களிலிருந்து பிரிக்க முடியாதது. இந்த வாக்குத்தத்தங்கள் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியுள்ளன.

(அப்போஸ்தலர் 13: 32, ஆதியாகமம் 13: 14-17, 22: 15-18, 2.சாமுவேல் 7: 12,16, லூக்கா 1: 31-33, கலாத்தியர் 3: 6-9,16, 26-29.)

### தேவன்... இவ்வளவாக உலகத்தை நேசித்தார்

தம்முடைய அன்பில் தேவன் தம்முடைய குமாரனாகிய மனுஷனான இயேசு கிறிஸ்துவை மனிதருடைய பாவங்களிலிருந்து அவர்களை இரட்சிக்கும்படி இந்த உலகத்திற்கு அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவர்கள் எவர்களோ, அவர்கள் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

(மத்தேயு 1: 20-21, 3: 17, லூக்கா 1: 35, யோவான் 3: 16.)

### கிறிஸ்துவின் பலி

இயேசு பாவமற்றவர். அவர் தேவனுடைய நீதியை விளங்கப்பண்ணும் பொருட்டும் தம்முடைய ஜீவபலியை விசுவாசத்தினாலே ஏற்றுக் கொள்கிறவர்களை விடுவிக்கும் பொருட்டும் மரித்தார். மரித்த அவரைத் தேவன் உயிரோடு எழுப்பின அழியாமையையும், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் கொடுத்து, தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராக அவரை நியமித்தார்.

(ரோமர் 3: 21-26, எபேசியர் 1: 19-23, 1.தீமோத்தேயு 2: 5-6, எபிரெயர் 4: 14-16.)

### இயேசு திரும்பி வருதல்

இயேசு வேகமாக இந்த பூமிக்குத் திரும்ப வருவார். அவர் அப்போது மரித்தவர்கள் அநேகரை உயிரோடு எழுப்பி, உயிரோடிருக்கிறவர்களுடன் அவர்களை நியாயம் விசாரித்து,

உண்மையாயிருந்தவர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தில் வாழும்படி நித்திய ஜீவனைக் கொடுப்பார்.

(தானியேல் 12: 2, மத்தேயு 25: 31-34, லூக்கா 21 :20-32, யோவான் 5: 28-29, அப்போஸ்தலர் 1: 11, 2.தீமோத்தேயு 4: 1, வெளிப்படுத்தல் 22: 12.)

## தேவனுடைய ராஜ்யம்

தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும். இயேசு ராஜாவாக எருசலேமிலிருந்து அரசாளுவார். அவருடைய அரசாட்சி பூமியெங்கும் நிலைக்கும். அவருடைய அரசாங்கம் நித்திய நீதியையும் சமாதானத்தையும் கொண்டு வரும்.

(சங்கீதம் 72, ஏசாயா 2: 2-4, 9: 6-7, 11: 1-9, 61: 1-11, எரேமியா 3: 17, தானியேல் 2: 44, 7: 14, 27, அப்போஸ்தலர் 3: 21.)

## இரட்சிப்பின் வழி

தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கும் ஒரே வழி விசுவாசம் மட்டும் தான். அதற்காக வேதவாக்கியத்தை நம்பி, அதற்குக் கீழ்ப்படிவதன் விளைவாக தங்கள் பாவங்களின் நிமித்தம் மனஸ்தாபப்பட்டு, அதை அறிக்கை செய்து, விட்டுவிட்டு, ஞானஸ்நானம் பெற்று, இயேசுவை உண்மையான இருதயத்தோடு பின்பற்றுவதே அந்த ஒரேவழி.

(மத்தேயு 16: 24-27, மாற்கு 16: 16, யோவான் 3: 3-5, அப்போஸ்தலர் 2: 37-38, 4: 12, 2.தீமோத்தேயு 3: 15, எபிரெயர் 11: 6.)

## சில முக்கிய வேறுபாடுகள்

எங்களிடம் அவ்வப்போது கேட்கப்படுகிறகேள்வி: ''பிறகிறிஸ்தவ குழுக்களிலிருந்து நீங்கள் எவ்வாறு வேறுபட்டிருக்கிறீர்கள்?'' என்பதே. எமது தனிப்பட்ட நிர்வாக (சபை ஊழியர் அல்லது சபைத்தலைவர் இல்லாத) அமைப்பைத் தவிர, மேலும் சில உபதேசங்களில் அநேக திருச்சபைகளி லிருந்து வேறுபட்டு நிற்கின்றோம்.

நாங்கள் திரித்துவ உபதேசத்தை முற்றிலும் நிராகரிக்கிறோம். இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு உருவான

திருச்சபைகளின் நடுவில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் விளைவாக (நிசேயா கவுன்சில் கி.பி.325) இந்த உபதேசம் உருவானது. வேதாகம போதனையின்படி, இயேசு தேவனுடைய குமாரன் என்பதே சத்தியம். அதைவிட்டு, அவர் வானத்தில் 'தேவனாகிய குமாரன்' ஆக தாம் பிறப்பதற்கு 'முன்பே' இருந்தார் என்பது சத்தியத்துக்கு முரண்பாடானது.

திரித்துவமானது இயேசுகிறிஸ்துவின் மனிதத்தன்மையையும், அவருடைய மரணத்தின் உண்மையையும் மறுதலிப்பதன்மூலம் அவருடைய கிரியையின் விலைமதிப்பைக் குறைப்பதாக உள்ளது. ஏனெனில் அவர் தேவனாக இருந்திருந்தால், சோதிக்கப்படவும் மரித்திருக்கவும் முடியாது.

(1.தீமோத்தேயு 2: 5, 1.கொரிந்தியர் 11: 3, எபிரெயர் 5: 8, யாக்கோபு 1: 13.)

மனிதன் மரிக்கும்போது, அவனது "அழிவில்லாத ஆத்துமா" பரலோகத்துக்குப் போகும் என்றபிரபலமான நம்பிக்கையை அடியோடு நிராகரிக்கிறோம். வேதாகமப் போதனையின்படி, இயேசு திரும்ப வரும்போது மரித்த நமது சடலங்கள் உயிர்பெற்று, நாம் நித்திய ஜீவனுடன் எழுப்பப்பட்டு, அவரோடு தேவனுடைய ராஜ்யத்தில் என்றென்றைக்கும் வாழுவோம், என்று நம்புகிறோம்.

(யோவான் 3: 13, அப்போஸ்தலர் 2: 34, 1.தெசலோனிக்கேயர் 4: 16.)

ஞானஸ்நானம் என்பது மிகவும் முக்கியம் என்றும், அது வயதுவந்தோருக்கு மாத்திரம் என்றும் விசுவாசிக்கிறோம். "சிசு நீர் தெளிப்பு" மற்றும் "குழந்தை பிரதிஷ்டை" ஞானஸ்நானம் ஆகாது.

(யோவான் 3: 5, கொலோசெயர் 2: 12, 1.பேதுரு 3: 21.)

மேலும் நாங்கள் ''பிசாசு'' என்பதை மனிதனின் பாவசுபாவத்துக்கு இணையான அடையாளமாக வேதம் பயன்படுத்துகிறதை விசுவாசிக்கிறோம். எனவே நாங்கள், " 'சோதனைக்காரன்' என்றஇயற்கைக்கு அப்பாற்பட்ட ஓர் நபர் இருக்கிறான்" என்ற உபதேசத்தை அடியோடு நிராகரிக்கிறோம்.

(ஏசாயா 45:7, மாற்கு 8:33, யோவான் 6:70, எபிரெயர் 1:14.)

# 2. எங்களது வாழ்க்கை முறைகள்

வேதாகமம் - ஜீவியத்தின் வழிக்காட்டி நூல்

வேதாகமமானது அதிகாரமுள்ளதால் அது நமது வாழ்வின் ஆதாரமாக இருக்க வேண்டும். கிறிஸ்டடெல்ஃபியர்களின் பொது வேதவாசிப்பு பஞ்சாங்கத்தின்படி வேதாகமத்தைத் தினமும் மூன்றுமுறை ஒழுங்காக வாசிப்பது அவர்கள் நடுவிலுள்ள பரவலான வழக்கமாக உள்ளது. அதன் மூலம் பழைய ஏற்பாட்டை ஆண்டிற்கு ஒரு முறையும் புதிய ஏற்பாட்டை இரண்டு முறையும் படித்து வரலாம். அநேகர் அதைவிட அதிகமாக வேதத்தைப் படிப்பதும் உண்டு.

(ரோமர் 15: 4, 1. தெசலோனிக்கேயர் 2: 13, யாக்கோபு 1: 22, 2. தீமோத்தேயு 2: 15.)

## ஜெபம்

புதிய ஏற்பாட்டின் உதாரணத்தையும் கிறிஸ்துவின் போதனைகளையும் பின்பற்றி, நாம் தேவனிடம் ஜெபிக்கிறோம். தேவன் பரலோகத்திலுள்ள நமது பிதா என்பதால், இயேசுவிடம் ஜெபிப்பதைவிட, தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் ஜெபிக்கிறோம். இதனால் நமது பலவீனங்களை அறிந்திருக்கிறஇயேசுவோடு தனிப்பட்ட உறவு வைப்பதில் எந்த தடையும் இல்லை.

(யோவான் 15: 16, 16: 26, எபிரெயர் 2: 15.)

## வேலை/அலுவல்

பவுல் அப்போஸ்தலனின் போதனை மற்றும் முன்மாதிரியைப் பின்பற்றி கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் அனைவரும் தங்கள் குடும்பத்தேவைகளை நேர்மையான வேலைகளைச் செய்வதன் மூலம் தாங்கும்படி எதிர்பார்க்கிறோம். சில அலுவல்களில் (அரசியல், வாயு-நீர்-தரைப் படை, காவல்துறை, குற்றவழக்கு முதலியவைகளில்) ஈடுபடுவதைத் தவிர்க்கிறோம்.

(1. தீமோத்தேயு 5: 8, 2. தெசலோனிக்கேயர் 3: 6-12.)

## குடும்ப ஜீவியம்

கணவன் மனைவி உறவு திருச்சபையுடன்

இயேசுகிறிஸ்துவுக்கு இருக்கிறஉறவுக்கு இணையாக இருக்கிறது. எனவே திருமண வாழ்க்கை மேலான பரிசுத்தத்தோடு காக்கப்பட வேண்டும். பிள்ளைகள் தேவனைப் பற்றிய அறிவில் வளருவதோடு, ஓய்வுநாட் பாடசாலை பயிற்சி, மற்றும் பெற்றோர்களோடு சேர்ந்து தினசரி வேதவாசிப்பில் பங்கெடுப்பது அவசியம் என்று கருதுகிறோம். முதியோர்களை அவர்களின் குடும்பங்களோடு இணைந்து சகோதரர்களும் பாதுகாக்கின்றனர்.

(எபேசியர் 5: 22-33, 6: 4, 1. தீமோத்தேயு 5: 4.)

**ஈகை**

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் தனிப்பட்ட முறையிலும், குழுக்களாகவும் தர்மம் செய்வதிலும் கொடுப்பதிலும் ஈடுபடுகிறார்கள். எனினும், "எங்களுடைய கிரியைகள் மனிதர் காணச் செய்வதை" தவிர்க்க முயலுகிறோம். மேலும் ஈகையை பிரசங்க ஊழியத்தோடு கலப்பதில்லை. ஏனெனில் ஜனங்கள் தவறான நோக்கங்களோடு இயேசுகிறிஸ்துவிடம் வருகிறதைத் தவிர்க்க விரும்புகிறோம்.

(கலாத்தியர் 6: 10, யாக்கோபு 1: 27, 2: 15-16, மத்தேயு 6: 1-4, யோவான் 6: 26.)

நாங்கள் தசமபாகம் (வருமானத்தில் பத்து சதவீதம்) திருச்சபைக்குக் கொடுப்பதில்லை. ஏனெனில் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தசம பாகமானது (லேவியர் ஆசாரியத்துவத்தின் ஊழியத்தைத் தாங்கும்படி) கொடுக்கப்பட்டது. அது இப்போது நீடிப்பதில்லை.

(எண்ணாகமம் 18: 24, எபிரெயர் 7: 1-28.)

## மாம்சமும் ஆவியும்

ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து நம்முடைய வாழ்க்கை முறையானது, மாம்சத்தின்படி நடவாமல் ஆவிக்கேற்றபடி நடப்பதன் மூலம் மாறவேண்டும். இதன் அர்த்தம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவியின் வல்லமை என்பதல்ல. ஏனெனில் மாம்சம் அல்லது ("பிசாசு") இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லமை என்று நாங்கள் நம்புகிறதில்லை. ஆனால் நமது ஜீவியத்தில் தேவனுடைய வார்த்தை மற்றும் அவருடைய கருணையுள்ள பராமரிப்பின் மூலம் கிரியை செய்கிறதை நாங்கள் அங்கீகரிக்கிறோம்.

(ரோமர் 6: 1-4, மாற்கு 14: 38, கலாத்தியர் 5: 22-25.)

## விசுவாசமும் கிருபையும்

நாங்கள் தேவனை முழுவதுமாக நம்பி, விசுவாசத்தினால் ஜெபத்திலும் நற்கிரியையிலும் சிறந்து விளங்க முயற்சி செய்கிறோம். அதே நேரம் இரட்சிப்பு கிருபையினால் வருகிறதென்று நாங்கள் அறிக்கையிடுகிறோம்.

(எபேசியர் 2: 8-9.)

தேவனுடைய உதவியைக் கொண்டு நாங்கள் அவரைப் பிரியப்படுத்தி தினசரி கீழ்ப்படிந்து நடக்கப் பார்க்கிறோம். அதன்மூலம் தம்முடைய பிதாவுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்த கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றமுயலுகிறோம். எனவே எங்கள் வேலையில் முழு உற்சாகத்துடனும், குடும்பவாழ்க்கையில் ஒழுக்கத்துடனும், ஈகையில் தாராளமாகவும், பிரசங்கிப்பதில் பிரதிஷ்டையுடனும், நமது தேவனில் மகிழ்ச்சியுடனும் ஜீவிக்க பாடுபடுகிறோம்.

# 3. எங்களது ஐக்கியம், தொழுகை, மற்றும் சாட்சி

## ஞாபகார்த்த கூட்டங்கள்

வாரம் ஒரு முறை தேவனைத் தொழுது கொள்ளவும், அப்பம் திராக்ஷ ரசத்தில் பங்கு பெறுவதன் மூலம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்றபலியை நினைவுகூரும் படியாகவும் கூடி வருகிறோம்.

(1. கொரிந்தியர் 11: 23-26, 12: 13, மத்தேயு 26: 26-30.)

அப்பம் மற்றும் திராக்ஷரசம் பகர்வதோடு, இந்த ஞாபகார்த்த கூட்டமானது ஜெபங்கள், ஸ்தோத்திரங்கள், வேதாகமத்தின் இரண்டு அல்லது மூன்று அதிகாரங்கள் வாசிப்பது, அநேக பாடல்கள் மற்றும் வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட "புத்தி சொல்வது" (உற்சாகமூட்டும் வார்த்தை) உள்ளடங்கியது. ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு சகோதரர்கள் கூட்டத்தை நடத்துவதும், மற்றொருவர் புத்தி சொல்லுவதும் உண்டு.

(எபேசியர் 5: 19, 1. தீமோத்தேயு 4: 13, எபிரெயர் 3: 13.)

இந்த ஞாபகார்த்தக் கூட்டத்தில் பங்குபெறுவதை எங்களது மதசம்பந்தமான ஜீவியத்தின் வெளிப்படாக கருதுகிறோம். அநேக தேசங்களில் இந்த கூட்டம் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படுகிறது. எனினும் வெவ்வேறு நாட்களிலும் (உ-ம். நேபாளத்தில் சனிக்கிழமையும், முஸ்லீம் நாடுகளில் வெள்ளிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமை பொதுவிடுமுறைநாளாக இல்லாததால்) அநுசரிக்கலாம். சிறுவர் ஓய்வுநாட் பள்ளியில் வேதாகமத்தைக் கற்றுக்கொள்கின்றனர்.

(அப்போஸ்தலர் 2: 42, 20: 7, 1. கொரிந்தியர் 16: 2.)

அநேக குழுக்கள் மாலை வேதாகம வகுப்புகளை வாரம் ஒருமுறைஅல்லது பலமுறை நடத்துகிறார்கள். மேலும் வாலிபர் குழுக்களும் இணைந்து செயல்படுகின்றன.

## வேதாகம பள்ளிகள்

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் வேதவியல் அறநெறி பள்ளிகளையும்

கல்லூரிகளையும் நடத்துகிறதில்லை. எனினும் அனைத்து அங்கத்தினரின் பயனுக்கென்று வேதாகம பள்ளிகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் அநேக கிறிஸ்டடெல்ஃபியர்கள் ஒன்றாக இணைந்து ஒரு வாரம் அல்லது வார முடிவு நாட்களை ஒதுக்கி, வேதாகம பள்ளி வளாகம் அல்லது கிறிஸ்தவ கூடுகை வளாகங்களில் கூடி, தொடர் வேதாகம ஆராய்ச்சி கூட்டங்களை நடத்துகின்றனர்.

இப்படிப்பட்ட வேதாகம பள்ளிகளில் இரண்டு அல்லது மூன்று பேச்சாளர்கள் வேதாகமத்தில் வெவ்வேறு புத்தகத்தைத் தெரிந்தெடுத்து, அதன் தலைப்பில் வேத ஆராய்ச்சி நடத்துவார்கள்.

## இயக்கம்/நிர்வாகம்

ஒவ்வொரு 'எக்லீஷியா'வும் தங்கள் சொந்த நிர்வாகத்துக் குட்பட்டவைகள். அதைக் கண்காணிக்க தேசிய அல்லது சர்வ தேச அளவில் எந்த தலைமையும் அல்லது மத்திய அலுவலகம் என்று ஒன்று இல்லை. ஆனால் கிறிஸ்டடெல்ஃபியர்கள் உலகம் முழுவதும் பொது விசுவாசத்தின் அடிப்படையில் தங்கள் ஐக்கியத்தைப் பரஸ்பரம் பகிர்ந்து கொள்கின்றனர். இவ்வாறு ஒவ்வொறு எக்லீஷியாவுடனும் உள்ள உறவானது பிறஜதீக திருச்சபைகளில் இருப்பதைப்போல் இராமல், குடும்பப்பாங்காக அமைகிறது. இது புதிய ஏற்பாட்டு முறையாகும்.

(எபேசியர் 3: 15, 4: 1-6, 1. யோவான் 1: 6-7.)

எருசலேமிலுள்ள ஆதித் திருச்சபையில் "வார்த்தை போதிக்கும் ஊழியம்" (பிரசங்கம் மற்றும் உபதேசம்) செய்யும்படி பன்னிரெண்டு மூப்பர்கள் பொறுப்பேற்றனர். மேலும் ஏழு மூப்பர்கள் காணிக்கை மற்றும் "உணவு விநியோக (பொதுநல) ஊழியத்"திற்கென்று நியமிக்கப்பட்டனர். அவ்வாறேஎபேசிய திருச்சபையில் அநேக மூப்பர்கள் (அதாவது "பேராயர்கள்") நியமிக்கப்பட்டிருந்தனர். இதன் மூலம் இன்றைய நவீன சபைகளின் சம்பளம் வாங்கி ஊழியம் செய்கின்றஒருவன் அதற்குப் போதகர் அல்லது ஆயராயிருப்பது தவறு என்று தீர்க்கிறது.

(மத்தேயு 23: 8-11, அப்போஸ்தலர் 1: 23-26, 6: 1-6, 20: 28.)

## பிரசங்கம் பண்ணுதல்

ஒவ்வொரு எக்லீஷியாவும் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் பரலோக ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கித்து இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்துப் போதிக்க முயலுகிறார்கள்.

(அப்போஸ்தலர் 8: 12, 28: 31, 2. தீமோத்தேயு 4: 2.)

சில அங்கத்தினர்கள் வெளிநாடுகளுக்கும், மேலும் சிலர் உள்நாட்டிலேயே வேறு பட்டணங்களுக்குச் சென்று அந்த ஊர் சகோதர சகோதரிகளை பலப்படுத்துகிறதும் பிரசங்கிக்கிறதும் உண்டு. தங்களுடைய தாய் சபையில் பிரசங்கம் பண்ணுகிறசகோதரர்களுக்கு எப்படி சம்பளம் இல்லையோ அதே போன்று இந்த தன்னார்வத் தொண்டு ஊழியர்களும் சம்பளம் பெறுகிறதில்லை.

(அப்போஸ்தலர் 20: 33-44, 1. தெசலோனிக்கேயர் 2: 9.)

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் வேதாகம முகாம்களையும் தொடர் கூட்டங்களையும் பலர் பல தேசங்களில் நடத்தி இலவச வேதாகம பிரதிகளையும் பத்திரிகைகளையும் விநியோகம் செய்கின்றனர். பவுலைப் போன்று நாங்களும் “சுவிசேஷத்தை இலவசமாக” பிரசங்கிக்க நோக்குகிறோம்.

(1. கொரிந்தியர் 9: 18.)

## ஓர் அழைப்பு

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் ஆகிய நாங்கள் எங்களால் முடிந்த வகைகளில் நெருக்கமாக இணைந்து, தேவனுடைய சேவையைச் செய்து வருகிறஒரு சமுதாயம் ஆவோம். உங்களுக்கு இதைக் குறித்து மேலும் தகவல் தேவையானால் அட்டையின் பின்னால் கண்ட உங்கள் சமீபத்திலுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

- ரோப் ஹின்ட்மன்

The Communications and Literacture requests from Readers in Karnataka, Kerala & Tamilnadu

கர்நாடகம், கேரளா, மற்றும் தமிழ்நாடு பொது தொடர்பு விலாசம்

**The Christadelphians,**
P.O. Box 535, Frazer Town,
Bangalore - 560005. INDIA.

கிறிஸ்டடெஃல்பியன்ஸ்
தபால் பெட்டி எண் 535
ஃபிரேசர் டவுன்,
பெங்களூர் 560005, இந்தியா

**<u>Elsewhere :</u>**

இதர மாநிலங்கள்:

**The Christadelphians,**
G.P.O. Box 159,
Hyderabad, A.P. 500001
India

கிறிஸ்டடெஃல்பியன்ஸ்
தபால் பெட்டி எண் 159
ஐதராபாத், ஆந்திரா 500001
இந்தியா

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA

கிறிஸ்டடெஃல்பியன்ஸ்
தபால் பெட்டி எண் 60
நெகொம்போ - 11500
ஸ்ரீலங்கா

**The Christadelphians,**
P.O. Box 9052,
Banani, DAKA - 1213
BANGLADESH

கிறிஸ்டடெஃல்பியன்ஸ்
தபால் பெட்டி எண் 9052
பனானி, டாக்கா - 1213
பங்களாதேஷ்

இந்தச் சிறு கைப்புத்தகத்தில் 'ரோப் ஹின்ட்மன்' உலகளாவிய கிறிஸ்டடெல்ஃபிய சகோதரத்துவத்தை அறிமுகஞ்செய்கிறார். ஒவ்வொரு பகுதியும் வேதாகம ஆதாரத்துடன் எழுதப்பட்டுள்ளது. எனவே உங்கள் வேதாகமத்தைத் திறந்து அதைச் சரிபார்த்து வாசிக்கும்படி உங்களை அன்புடன் கேட்கிறோம்.

**இதிலடங்கிய பகுதிகள்:**

1. எங்களது நம்பிக்கைகள்
2. எங்களது வாழ்க்கை முறைகள்
3. எங்களது ஐக்கியம், தொழுகை, மற்றும் சாட்சி

The Christadelphians - Tamil
1500 Copies - 2008

- இலவச மாதாந்திர வேதாகம பத்திரிக்கை
- வேதாகம தொடர் அஞ்சல் வழி கல்வி
- அருகாமையில் நடைபெறும் வேதாகம கலந்துரையாடல் வேதஆராய்ச்சி

மேல் கூறப்பட்டுள்ளவைகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

*கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு தொடர்புக்கு*

**கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**

தபால் பெட்டி எண் 535
ஃபிரேசர் டவுன், பெங்களூர் 560005, இந்தியா

*வேறு இடங்களுக்கு*
Elsewhere:

**Printland Publishers, GPO Box 159,
Hyderabad A.P. 500001, INDIA**